முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்

முன்னிலை: திரு. இரா.வேலரஸ், B.Sc.,B.L., LL.M.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, சேலம்.
2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ம் நாள் வியாழக்கிழமை

இடைநிலை மனு எண். 01/2021
in
அசல் வழக்கு எண். 127/2021

1. சியாமளா கௌரி
2. மைனர் திவ்யேஷ்
மைனரின் சார்பாக அடுத்த தோழி/ பாதுகாவலர் தாயார்
சியாமளா கௌரி ... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

வெங்கடேஷ் .... எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி

இம்மனு 05.11.2025 ம் தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.S.விஜயராகவன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/ 1–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.செல்வகீதன் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

உத்தரவு

மனுதாரர்கள்/ வாதிகள் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–இன் கீழ் எதிர்மனுதாரர்/ 1–ம்பிரதிவாதி அசல் வழக்கு விசாரணை முடியும் வரையில் மனு சொத்துக்களில் எவ்வித வில்லங்க பாராதீனம் செய்யவோ அல்லது மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்யவோ கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:20:57 +0530

2. <u>மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு</u> :-

முதல் மனுதாரரின் தாயார் செல்லம்மாள் மற்றும் முதல் பிரதிவாதியின் தந்தை ராஜு ஆகியோர்கள் உடன்பிறந்த சகோதரி மற்றும் சகோதரர் ஆவார்கள். அவர்கள் ஒரு முத்துகவுண்டர் மற்றும் பழனியம்மாளின் பிள்ளைகள் ஆவார்கள். மேற்படி முத்துகவுண்டர் மற்றும் பழனியம்மாள் மனுதாரருடன் மிகவும் பாசத்துடன் இருந்து வந்தார்கள். முதல்பிரதிவாதி அவர்களது பேரன் ஆவார். மேற்படியார்களின் ஆசீர்வாதத்துடன் முதல் மனுதாரர், எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதியை கடந்த 25.10.2006 ம் தேதியன்று திருமணம் செய்து கொண்டார். மேற்படி திருமண பந்தத்தின் காரணமாக 2-ம் மனுதாரர்/வாதி கடந்த 14.10.2007 ம் தேதியன்று பிறந்தார். 1 ம் மனுதாரரும், 1-ம் எதிர்மனுதாரரும் சந்தோசமாக தங்கள் குடும்ப வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். முத்துகவுண்டரும் எதிர்மனுதாரருக்கு பண உதவிகளும் செய்து வந்தார். இந்நிலையில் முத்துகவுண்டர் எதிர்மனுதாரர் மீது வைத்துள்ள பாசம் மற்றும் அன்பின் காரணமாக 15.12.2011, 16.04.2012, 11.05.2012, 12.12.2014, 29.06.2018, 16.08.2019 ஆகிய தேதிகளில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களையும் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி பெயரில் கிரையம் பெற்றார். மேற்படி சொத்துக்கள் மனுதாரர்களின் நலனுக்காகவும், 1-ம் எதிர்மனுதாரரின் நலனுக்காகவும் முத்துக்கவுண்டரால் அவரது நிதியிலிருந்து வாங்கப்பட்டது. மேற்படி சொத்துக்களை எதிர்மனுதாரரும், மனுதாரர்களும் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள். இந்நிலையில் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி எவ்வித காரணங்களுமின்றி 1-ம் மனுதாரரோடு அடிக்கடி சண்டை போட்டு வந்தார். அப்போதுதான் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் முதல் பிரதிவாதி ஒரு பெண்ணுடன் தகாத உறவை வைத்துள்ளார் என்று

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:21:09 +0530

கூறியதால், முதல் மனுதாரர் இதுகுறித்து விசாரித்தபோது செந்தில் பள்ளிக் பள்ளியில் பணிபுரிந்து வரும் கோமதி என்ற ஆசிரியையுடன் எதிர்மனுதாரருக்கு தகாத உறவு இருந்து வந்ததாக தெரியவந்தது. இதன் காரணமாகவே எதிர்மனுதாரர், மனுதாரர்களை வெறுத்து வந்தார் என்பதும் தெரிய வந்தது. மேற்படி ஆசிரியை கோமதி ஒரு வினோத்குமார் என்பவரை திருமணம் செய்து கொண்டு அவர்களுக்கும் ஒரு குழந்தை இருப்பதாகவும் மனுதாரருக்கு தெரிய வந்தது. இந்நிலையில் 1–ம் மனுதாரரை விவாகரத்து செய்வதாக HMOP.No.5/2021 என்ற விவாகரத்து மனுவை எதிர்மனுதாரர் ஓமலூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து மேற்படி வழக்கில் முதல் மனுதாரருக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் அனுப்பப்பட்டிருந்தது. அதேபோன்று மேற்படி கோமதி என்பவரும் சேலம், குடும்ப நல நீதிமன்றத்தில் HMOP.81/2021 – என்ற மனுவை தாக்கல் செய்திருந்தார்கள். எனவே எதிர்மனுதாரரான வெங்கடேசும், கோமதியும் தங்கள் துணைவர்களை விவாகரித்து செய்துவிட்டு திருமணம் செய்து கொள்ளும் நோக்கத்துடன் செயல்பட்டுள்ளார்கள் என்பது தெள்ளத்தெளிவாக தெரிய வருகின்றது. இந்நிலையில் மனுதாரர் மனுவில் கண்டுள்ள சொத்துக்களை 3 பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை பிரித்துதருமாறு மத்தியஸ்தர்கள் மூலம் 1–ம் மனுதாரர் கோரி வந்துள்ளார். எதிர்மனுதாரர் 2020 வருடத்திலிருந்தே மனுதாரர்களை கவனிக்காமல் இருந்து வருகிறார். மேலும் 2–ம் மனுதாரரின் கல்வி மற்றும் பிற தேவைகளுக்காகவும் மாதம் ரூ.50,000/– தேவைப்படுகிறது. எதிர்மனுதாரர் மனுதாரர்களை பராமரிக்க கடமைப்பட்டவர் ஆவார். அவர்களுக்கு ஜீவனாம்ச தொகை வழங்கவும் கடமைப்பட்டுள்ளார். மேலும் மனு சொத்துக்களை பிரிவினை செய்து தங்கள் பாகத்தை ஒதுக்குமாறு கோரியும் எதிர்மனுதாரர் மறுத்து வருகிறார். மேலும்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:21:17 +0530

எதிர்மனுதாரர் மனு சொத்துக்களை மூன்றாம் தரப்பினர்களுக்கு விற்பனை செய்யவும் முயற்சி செய்து வருகிறார். எனவே அசல் வழக்கு விசாரணை முடியும் வரையில் தாவா சொத்துக்களில் எவ்வித வில்லங்க பாராதீனமோ அல்லது மூன்றாம் தரப்பினருக்கு மனு சொத்துக்களை விற்பனை செய்யவோ கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

3. <u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:–</u>

மனு சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்களால் மனுவில் ஒப்புக் கொண்டுள்ள சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவராவார். முதல் மனுதாரரின் தாயார் செல்லம்மாள் மற்றும் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் தந்தை ராஜு ஆகியோர்கள் உடன்பிறந்த சகோதரி மற்றும் சகோதரர் ஆவார்கள் என்பது உண்மை. அவர்கள் ஒரு முத்துகவுண்டர் மற்றும் பழனியம்மாளின் பிள்ளைகள் ஆவார்கள். மேற்படி முத்துகவுண்டர் மற்றும் பழனியம்மாள் மனுதாரருடன் மிகவும் பாசத்துடன் இருந்து வந்தார்கள். முதல்பிரதிவாதி அவர்களது பேரன் ஆவார். மேற்படியார்களின் ஆசீர்வாதத்துடன் முதல் மனுதாரர், எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதியை கடந்த 25.10.2006ம் தேதியன்று திருமணம் செய்து கொண்டார் என்பதும் அதன் பயனாக 2ம் மனுதாரர் 14.10.2007 அன்று பிறந்தார் என்பதும் உண்மையாகும். முத்துகவுண்டர் எதிர்மனுதாரர் மீது வைத்துள்ள பாசம் மற்றும் அன்பின் காரணமாக 15.12.2011, 16.04.2012, 11.05.2012, 12.12.2014, 29.06.2018, 16.08.2019 ஆகிய தேதிகளில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களையும் எதிர்மனுதாரர்/1ம்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:21:24 +0530

பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டது என்பதும் மேற்படி கிரைய சொத்துக்கான நிதி உதவி முழுவதும் முத்துகவுண்டரே செலுத்தினார் என்பது தவறானதாகும். உண்மை என்னவெனில் முதல் மனுதாரர் தனது குணத்தை மாற்றிக்கொண்டு எப்போதும் எதிர்மனுதாரரை சந்தேகித்து வந்தார். மேலும் மனு சொத்துக்களை முதல் மனுதாரரின் பெயருக்கு மாற்றுமாறு கேட்டார். ஆனால் எதிர்மனுதாரர் மறுத்துவிட்டார். மனு சொத்துக்கள் அனைத்தும் 1–ம் எதிர்மனுதாரர் சுயமாக வாங்கிய சொத்துக்கள் ஆகும். மேற்படி சொத்துக்களை 1ம் மனுதாரர் அபகரிக்க முயற்சி செய்து வந்தார். மேலும் 1–ம் எதிர்மனுதாரர், 2–ம் மனுதாரரை மேற்படி கோமதி ஆசிரியையிடம் டியூசனுக்கு அழைத்துசென்று வந்ததாகவும், தங்கள் தவறான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே எதிர்மனுதாரர் கோமதி ஆசிரியையிடம் 2ம் மனுதாரரை டியூசனுக்கு அனுப்பி வைத்தார் என்று கூறுவதும் தவறான சங்கதிகள் ஆகும். உண்மையில் என்னவென்றால் கோமதி ஆசிரியையிடமிருந்து எதிர்மனுதாரர் கடன் வாங்கியதன் அடிப்படையில் ஒருவருக்கொருவர் தெரிந்தவர்கள் ஆவார்கள். மேலும் அந்த கோமதி ஆசிரியையுடன் எதிர்மனுதாரருக்கு நெருங்கிய தொடர்போ, திருமணத்திற்கு புறம்பான உறவோ இல்லை. எதிர்மனுதாரர் வட்டி செலுத்தவில்லை என்றால் கோமதி ஆசிரியை எதிர்மனுதாரை அழைத்து வட்டி செலுத்துமாறு அறிவுறுத்துவார். இருவருக்கமிடையே கடனாளி மற்றும் கடன் வழங்குபவர் என்ற உறவு முறை மட்டுமே இருந்து வந்தது. இது 1–ம் மனுதாரருக்கும் நன்கு தெரியும். மேலும் 1–ம் மனுதாரர் ஓமலூர், சார்பு நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட சம்மனை பெற்றுக்கொண்டு அதனை பார்த்தபோது ஓமலூர் சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் HMOP.No.5/2021 என்ற மனுவை 1–ம் மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்து அதில்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:21:32 +0530

விவாகரத்து கோரியிருந்தார் என்பது தெரிய வந்தது என்பதும் மேற்படி விவாகரத்து மனு பொய்யான குற்றச்சாட்டுக்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறுவது தவறானதாகும். அதேபோன்று மேற்படி கோமதி என்பவரும் சேலம், குடும்ப நல நீதிமன்றத்தில் HMOP.81/2021 – என்ற மனுவை தாக்கல் செய்திருந்தார் என்றும், எனவே எதிர்மனுதாரரும், சுமதியும் தங்கள் துணைவர்களை விவாகரித்து செய்துவிட்டு திருமணம் செய்து கொள்ளும் நோக்கத்துடன் செயல்பட்டுள்ளார்கள் என்று கூறுவதும் தவறானதாகும். அதேபோன்று எதிர்மனுதாரர் மனுதாரர்களை பார்க்க வருவதில்லை என்று கூறுவதும் தவறானதாகும். மனுச் சொத்துக்களை எதிர்மனுதாரர் கோமதி உட்பட பல்வேறு நபர்களிடமிருந்து கடன் பெற்று மனுச் சொத்துக்களை தன்னுடைய சுய சம்பாத்தியத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளார். எனவே மனு சொத்துக்கள் எதிர்மனுதாரருக்கு மட்டுமே பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். எனவே மனுச்சொத்துக்களில் வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. 2–ம் எதிர்மனுதாரரின் கல்வி செலவு மற்றும் பிற தேவைகளுக்காக மாதம் ரூ.50,000/– வரை செலவாகிறது என்பதும் எதிர்மனுதாரர் மனுதாரர்களை பராமரிக்கவும் கடமைப்பட்டுள்ளார் என்றும் எனவே ஜீவனாம்ச தொகையாக மாதம் ரூ.50,000/– கேட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பதாக கூறுவதும் தவறானதாகும். உண்மை என்னவெனில் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தனது பினாமியாக 1–ம் மனுதாரரின் பெயரில் ரூ.7,00,000/–ஐ வைப்பீடு செய்து 1–ம் பிரதிவாதியின் சார்பாக ஸ்ரீ ராஜகணபதி பைனான்ஸ், கரும்பாலையில் பங்குதாரராக சேர்த்துள்ளார். மேலும் இந்த நிதிநிறுவனம் 1ம் மனுதாரருக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.20,000/– வட்டி வழங்குகிறது. எனவே எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி தனது மகன் மற்றும் மனைவியை கடமை பட்ட

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:21:40 +0530

தந்தையாகவும், கணவராகவும் இருந்து பராமரித்து வருகிறார். எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் :–

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. **<u>தீர்வு :–</u>**

இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகளால் 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கு வமுடியும் வரையில் மனு சொத்துக்களைப் பொறுத்து 1–ம் எதிர்மனுதாரர் யாதொரு வில்லங்க பாராதீனத்தையும் ஏற்படுத்தக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவிலும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கிலும் இந்த மனுச் சொத்துக்கள் /வழக்கு சொத்துக்கள் மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், 1–ம் மனுதாரரின் தாயார் செல்லம்மாள் , 1ம் பிரதிவாதியின் தகப்பனார் ராஜூவிற்கு உடன்பிறந்த சகோதரி என்றும், எதிர்மனுதாரர் மற்றும் 1–ம் மனுதாரரின் பாட்டனார் முத்துகவுண்டர் மற்றும் பாட்டி பழனியம்மாள் ஆகியோர்கள் 1–ம் மனுதாரர் மீதும், எதிர்மனுதாரர் மீதும் அளவு கடந்த பாசம் வைத்திருந்த காரணத்தினால் எதிர்மனுதாரருக்கு 1–ம் மனுதாரரை 25.10.2006ம் தேதியன்று திருமணம் செய்து வைத்தார்கள் என்றும், அதன் விளைவாக 2–ம் மனுதாரர் 14.10.2007ம் தேதியன்று பிறந்ததாகவும், 1–ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:21:47 +0530

நல்லமுறையில் வாழ்ந்து வந்த நிலையில் அவர்களின் பாட்டனார் முத்துகவுண்டர் இருவர் மீதும் உள்ள அன்பின் காரணமாக வழக்கு சொத்துக்களை /மனு சொத்துக்களை 15.12.2011, 16.04.2012, 11.05.2012, 12.12.2014, 29.06.2018, 16.08.2019 ஆகிய தேதிகளில் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதியின் பெயரில் பெயரளவிற்கு கிரையம் பெற்று வைத்தார் என்றும், மேற்படி கிரைய தொகைகள் முழுவதும் முத்துகவுண்டரால் செலுத்தப்பட்டது என்றும், எனவே மனு சொத்துக்கள்/வழக்கு சொத்துக்கள் எதிர்மனுதாரருக்கு மட்டுமே பாத்தியப்பட்டதல்ல என்றும், அதில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு 2/3 பாகமும், எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதிக்கு 1/3 பாகமும் உரிமை ஏற்பட்டுள்ளது என்றும், எனவே மேற்படி மனுதாரர்கள்/வாதிகளுக்கு உண்டான 2/3 பாகத்தை கோரி மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், மேற்படி வழக்கு தாக்கல் செய்வதற்கான காரணம் 2–ம் மனுதாரர் படித்துவரும் சேலம், செந்தில் பப்ளிக் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வரும் கோமதி என்பவருடன் எதிர்மனுதாரர் தவறான உறவை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், மேற்படி கோமதியிடமே 2–ம் மனுதாரரை டியூசன் படிக்க அனுப்பி வைத்து எதிர்மனுதாரர் அவரது தவறான உறவை பலப்படுத்தி கொண்டார் என்றும், அதன் காரணமாக மனுதாரர்களை விட்டு விட்டு 1–ம் மனுதாரருக்கு எதிராக எதிர்மனுதாரர் ஓமலூர், சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி HMOP.No.5/2021 என்ற விவாகரத்து மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதேபோன்று, மேற்படி கோமதியும் தனது கணவர் வினோத்குமாருக்கு எதிராக விவாகரத்து கோரி சேலம், குடும்ப நல நீதிமன்றத்தில் 81/2021 – என்ற மனுவினை தாக்கல் செய்திருப்பதை தான் அறிந்து கொண்டதாகவும், எதிர்மனுதாரர் மனு சொத்துக்களை வேறு மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்ய

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:21:57 +0530

ஏற்பாடு செய்து வருகிறார் என்றும், மனுதாரர்களுக்கு ஜீவனாம்சம் கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்பதற்காக எதிர்மனுதாரர் மனு சொத்துக்கள்/வழக்கு சொத்துக்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்ற காரணத்தினால் வழக்கு முடிவடையும் வரையில் மேற்படி மனு சொத்துக்களைப் பொறுத்து எதிர்மனுதாரர் யாதொரு வில்லங்க பாராதீனத்தையும் ஏற்படுத்தக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

7. மேற்படி மனுவில் ஆஜரான எதிர்மனுதாரர் குறிப்பு ஒன்றினை தாக்கல் செய்து அவரால் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையை எதிருரையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். மேற்படி பதிலுரையில் மனு சொத்துக்கள்/வழக்கு சொத்துக்களை அனைத்தும் எதிர்மனுதாரருக்கு மட்டுமே பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், மேற்படி சொத்துக்களில் மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், மேற்படி சொத்துக்கள் கிரையம் பெறுவதற்கு முத்து கவுண்டர் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அனைத்தும் தனது சொந்த உழைப்பின் மூலம் வந்த வருவாயை கொண்டும், தான் கடன் பெற்றும் கிரையம் பெறப்பட்டது என்பதால் மனுதாரர்கள்/வாதிகளின் வழக்கு நிலைக்கக்கூடியதல்ல என்றும் எனவே அதனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், மனுதாரர்களால் சேலம் செந்தில் பப்ளிக் பள்ளியில் பணிபுரிந்து வரும் ஆசிரியை பொறுத்து சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானவை என்றும், இந்த எதிர்மனுதாரருக்கு எந்த ஒரு பைனான்ஸ் நிறுவனத்திலும் பங்குகள் இல்லை என்றும், இந்த எதிர்மனுதாரர் ரூ.7,00,000/-ஐ தனியார் பைனான்சில் டெப்பாசிட் செய்துள்ளார்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:22:04 +0530

என்றும், 1–ம் மனுதாரர் தான் ஸ்ரீ ராஜகணபதி பைனான்ஸ் நிறுவனத்தில் பங்குதாரராக உள்ளார் என்றும் அதிலிருந்து மாதம் ரூ.20,000/– அவருக்கு வருமானம் வருகிறது என்றும், மனு சொத்துக்களை எதிர்மனுதாரர் விற்பனை செய்ய முயற்சி செய்து வருவதாக சொல்லியுள்ள சங்கதிகள் தவறானவை என்றும், எனவே மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

8. மேற்படி மனுதாரர் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீன பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், ஜீவனாம்சம் பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கு சொத்துக்கள்/மனு சொத்துக்கள் எதிர்மனுதாரருக்கு மட்டுமே பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று கட்சி செய்து வந்தபோதிலும் 1ம் மனுதாரர், எதிர்மனுதாரரின் மனைவி அல்ல என்றோ, 2–ம் மனுதாரர் எதிர்மனுதாரரின் மகன் அல்ல என்றோ எவ்விதமான கட்சியும் எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்படவில்லை. மேற்படி மனுதாரர்கள் தங்களுக்கு மாத ஜீவனாம்சமாக ரூ.50,000/– வீதம் ரூ.6,00,000/–ஐ வருட ஜீவனாம்சமாக கோரியுள்ளார்கள். எனவே, மேற்படி மனு சொத்துக்களைப் பொறுத்து இந்த வழக்கு முடிவடையும் வரையில் யாதொரு வில்லங்க பாராதீனத்தையும் ஏற்படுத்தக்கூடாது என்று மனுதாரர்கள்/வாதிகளால் கோரப்படும் இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் மனுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியமானதாக உள்ளது. மேற்படி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படவில்லை எனில் இந்த எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி மனுதாரர்களுக்கு ஜீவனாம்சம் கொடுக்ககூடாது என்ற எண்ணத்தில் மனு சொத்துக்களைப் பொறுத்து வேண்டுமென்றே வில்லங்க பாராதீனத்தை ஏற்படுத்தி விட்டால் மேற்படி மனு

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:22:12 +0530

சொத்துக்களில் பொதுவாக தொடர்பை ஏற்படுத்தக்கூடிய நபர்கள் தனியாக வழக்குகள் தாக்கல் செய்வதற்கும், இந்த மனுதாரர்கள்/வாதிகளை தேவையற்ற வகையில் இன்னல்களுக்கு உள்ளாக்குவதற்கும் வாய்ப்புள்ளது. மேற்படி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவிற்கு முதல்நோக்கும் சமநிலை வாய்ப்பும் உள்ளது. அதேபோன்று இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வழங்கவில்லை எனில் அது இந்த மனுதாரர்களுக்கு உண்டான உரிமையை பாதிப்பதாக அமைந்துவிடும். எனவே, அவ்வாறு எதிர்மனுதாரர் ஏதேனும் வில்லங்க நடவடிக்கையை மேற்கொண்டால் அது இந்த மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஈடு செய்ய இயலாத இழப்பினை ஏற்படுத்தி விடும். இந்த சூழ்நிலையில் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்படும் வாதம் ஏற்புடையதல்ல. மேற்படி எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் கண்டுள்ள சங்கதிகள் மனுதாரர்கள்/ வாதிகளின் மனுவினை நிராகரிக்க கூடிய வகையில் இல்லை. எனவே மனுதாரர்கள்/வாதிகள் சரியான பரிகாரத்திற்கு இந்த மனுவினை சுத்தமான கரங்களுடன் தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த மனுவினை அனுமதித்து எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதிக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரத்தை இவ்வழக்கு முடியும் வரையில் வழங்கி உத்தரவிடுவதே நீதிக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவில் இம்மனு அனுமதித்தும், எதிர்மனுதாரர்/ 1–ம் பிரதிவாதி மனு சொத்துக்களைப் பொறுத்து அசல் வழக்கு முடியும் வரையில் மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்யவோ அல்லது எவ்வகையிலும் வில்லங்க பாராதீனம்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:22:19 +0530

ஏற்படுத்தக்கூடாது என்றும், மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஆதரவாக இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. தரப்பினர்களின் உறவுமுறையை கருத்திற்கொண்டு செலவு தொகை இல்லை.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 04–ம் தேதியான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:22:26 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:22:31 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.